# குருதிக்கொடை மூலம் உயிர்காப்போம் வாருங்கள்!



'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது'

அதிகாரம் 11 குறள் 103

It's an *honor* to be a *blood donor.*

**குருதி...**

- குருதியானது குருதிக் கலங்களையும் குருதி நீர்ப்பாயத்தையும் (Plasma) கொண்டது.

- குருதிக் கலங்கள் தமது வாழ்க்கைக் காலத் தின்பின் இயல்பாகவே அழிவடைந்து விடுகின்றன. அவற்றின் வாழ்நாட்கள்:

. செங்குருதிக் கலங்கள் - RBC -120 நாட்கள்

வெண்குருதிக் கலங்கள்-WBC } 2-7

குருதிச் சிறுதட்டுக்கள் - Platelets } நாட்கள்

- எனவே மேற்படி குறித்த கால இடைவெளியில் அழிவடையும் இரத்தத்தின் ஒரு சிறிய பகுதி யையே (1/10) இரத்த தானத்தின் போது வழங்கு கின்றார்கள்.

- இச் சிறுதுளி உதிரத்தின் உதவிமூலம் ஊசலாடும் உயிர்களைக் காத்து, தாங்கள் அடையும் ஆத்ம திருப்தி அளப்பரியது.

**ஏன் இரத்ததானம் செய்ய வேண்டும்?**

- மனிதனே ஒரே ஒரு உற்பத்தித்தானம்

- இரத்தம் வாழ்வுக்கு இன்றியமையாதது

- எவருக்கும் எந்தநேரத்திலும் தேவைப்படலாம்

- இன்றுவரை மருத்துவ உலகில் இரத்தத்திற்கு மாற்றீடாக செயற்கையாக எதுவும் கண்டறியப் படவில்லை

**குருதி மாற்றீடு எச்சந்தர்ப்பத்தில் தேவை?**

- ➤ சத்திரசிகிச்சை
- ➤ மகப்பேறு
- ➤ புற்றுநோய்
- ➤ குருதி உறையாநோய்

**யார் இரத்ததானம் செய்யலாம்?**

- ➤ ஆண் பெண் இருபாலாரும்.
- ➤ 18 - 60 வயதிற்குட்பட்டவர்கள்
- ➤ நிறை 50kg ற்கு மேற்பட்டவர்கள்
- ➤ ஆரோக்கியமாகவும் எவ்வித நோயும் இல்லாமல் இருப்பது இரத்தம் கொடுப்பவரையும் பெறுபவரையும் பாதுகாக்கும்.

**இரத்ததானத்தின் போது......**



- ➤ 450ml உதிரம் (<1/10) மாத்திரமே கொடுக்கப்படுகின்றது.
- ➤ 7-15 நிமிடங்கள் மட்டும் போதுமானது.

**இரத்ததானம் செய்தல் உடலிற்குப் பாதிப்பானதா?**

- ➤ ஒருபோதும் இல்லை.
- ➤ ஊசியினால் குத்தும்போது ஏற்படும் காயத்தைத் தவிர எந்தக் காயமும் உடலில் தோன்றாது.
- ➤ குருதி கொடுத்தவர் தன் வழமையான வேலைக்கு உடன் திரும்பலாம்.
- ➤ கொடுக்கப்பட்ட முழுக்குருதியும் 03 நாட்களுக்குள் மீண்டும் உருவாக்கப்பட்டுவிடும்.

**இரத்ததானத்தின் பின்பு......**

➤ **விசேட உணவு ஏதும் தேவையில்லை**

➤ **உயிர்காக்கும் இவ் உன்னத பணியை 4 மாதங்களுக்கு ஒருமுறை இருபாலாரும் எவ்வித தடைகளும் இன்றி தொடர்ச்சியாக 60 வயதுவரை மேற்கொள்ளலாம். (வேறு நோய்கள் ஏற்படாத பட்சத்தில்)**

**இரத்ததானத்தால் கிடைக்கும் நன்மைகள்......**

ஒழுங்கான குருதித்தானம் தொடர்ச்சியாகத் தவணைமுறையில் செய்யப்படுவதனால் ஏற்படும் நன்மைகள்:

➤ மருத்துவரீதியான உடற்பரிசோதனையும், குருதி மாதிரிப் பரிசோதனையும் செய்வதன் மூலம் இலவசமாக தனது உடலில் ஆரோக்கிய நிலையை அறிந்து கொள்ளல்

- நாடித்துடிப்பு
- நிறை
- குருதி அமுக்கம்
- குருதி நிறப்பொருளின் அளவு
- குருதிக்கூட்டவகை (A,B, AB, O)

➤ புதிய செங்குருதிக் கலங்களின் உற்பத்தி என்புமச்சையில் தூண்டப்படும்

➤ எனவே நுண்ணிய குருதிச் சுற்றோட்டம் புத்துயிர்ப்பு பெற்று விருத்தியடையும்

➤ உதிரத்தில் அதிகரிக்கும் கொலஸ்திரோல் (Cholesterol) குறைவதன் மூலம் மாரடைப்பு, பாரிசவாதம் போன்ற நோய்கள் வராமல் தவிர்க்கலாம்.

➤ ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்கான சந்தர்ப்

பத்தைப் பெற்றுக் கொள்வதுடன் எல்லையற்ற ஆனந்த அனுபவத்தையும் ஆத்ம திருப்தியையும் பெறமுடியும்.

- ➤ உங்களிற்கோ, உங்களின் உடன்பிறந்தோருக்கோ குருதி மாற்றீடு அவசியமான நேரத்தில் இலகுவாகவும் விரைவாகவும் இரத்த வங்கியூடாக பெற்றுக் கொள்ளலாம்
- ➤ உங்கள் குருதிக் கொடையினை உறுதிப்படுத்தும் ஓர் சிறுபுத்தகம் வழங்கப்படும்.

**இரத்ததானம் செய்வது ......**

- ➤ அரசினர் வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கி.
- ➤ நடமாடும் இரத்ததான நிலையம் - அலுவலகங்கள், சனசமுக நிலையங்கள், கோயில்கள்.



*தாகம் தீர்க்க தேவை தண்ணீர்*
*உயிர் கொண்ட தேகம் காக்க*
*தருவீர் செந்நீர்..............*

*இனியொரு புதுயுகம் செய்வோம் - மானிட*
*இனமென எழுந்ததன் இலட்சியம் உய்வோம்!*

*தனியொரு மனிதனின் குருதி - ஆங்கொரு*
*தவித்திடும் உயிரைத் தாங்குவ துறுதி*

*துணிவுடன் நீர் செயும் தானம் - பிறர்*
*துயரினைப் போக்கிய திருப்தியைப் பேணும்*

*அணிசெயும் தமிழினத் தோழா குருதி*
*அளிப்பதும் எங்களின் அதிதிறம் வா! வா!!*

**வெளியீடு:**

**இரத்த வங்கி**
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**சுகாதார கல்விசார் பொருட்கள் தயாரிப்பு அலகு**
சமுதாய மருத்துவத்துறை
மருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்

அனுசரணை:

# City Medicals

**Distributors For:**
State pharmaceuticals corporation of Sri Lanka,
Astron Ltd, Glaxo welcome Pvt. Ltd, Aventis Ltd,
S.P.M.C and Mega pharma Pvt Ltd

487, Hospital Road, Jaffna.